பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லிக்கொண்டு தங்கள் மனதிலே என்ன கருத்து இருக்கிறதோ அதைக் கூறுவதற்கோ, அமைச்சர்கள் செய்திகள் தெரிவிக்க வேண்டுமென்று கேள்விகள் எழுப்புவது முறையாகாது என்று நம்முடைய விதிகள் கூறுகின்றன. அந்த விதிகளில் கொடுக்கப் பட்டிருக்கிறதை நோக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : அந்த துப்பாக்கிச் சூட்டைப்பற்றி விசாரணை என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, நீதி விசாரணையைப் பொறுத்தவரையிலும் முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவு என்ன? நீதி விசாரணை மட்டும் எப்படி . . . (மணி அடிக்கப்பட்டது)

(ii) இளைஞர் காங்கிரஸ் ஊர்வலத்தின் மீது தடியடிப் பிரயோகம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்த நிகழ்ச்சி. இப்பொழுது திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள், திரு. கே. விநயகம் அவர்கள், திரு. க. இராமமூர்த்தி அவர்கள், திரு. கோமதிசங்கர திட்சிதர் அவர்கள், 1—8—1968 அன்று சென்னையிலே இளைஞர் காங்கிரஸ் ஊர்வலத்தின் மீது போலீஸ் தடியடிப் பிரயோகம் நடத்தியதைப் பற்றி ஒரு ஒத்திவைப்பு தீர்மானம் கொடுத்துள்ளார்கள். இதுவும் அரசின் அன்றாட நிகழ்ச்சிகளுக்கு உட்பட்ட நிகழ்ச்சியாகும். ஆகவே, இதற்கும் நான் அனுமதி தர மறுக்கிறேன்.

திரு. கே. விநயகம் : மிஸ்ட்டர் ஸ்பீக்கர், சார், போலீஸ் உத்தியோகஸ்தர்கள் அமைதியாகப் போகிற தொண்டர்கள் மீது தடியடி நடத்தியதால் குறைந்தது 600 பேர் காயமுற்றார்கள். அடுத்து, 300 பேருக்கு மேற்பட்டவருக்கு . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது நான்—(திரு. கே. விநயகம் அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள்) விநயகம் அவர்கள் உட்காருங்கள்—ஒரு தீர்ப்பளித்து விட்டேன். அந்த தீர்ப்புக்குப் பணிந்து இந்த சபையினுடைய கண்ணியத்தைக் காப்பாற்ற நினைக்கிறீர்களா? அல்லது சபாநாயகர் தீர்ப்பளித்த பிறகும் அந்த தீர்ப்புக்கு எதிர் வாதம் பேச வேண்டுமென்ற முறையை இந்த மன்றத்திலே கொண்டு வர விரும்புகிறீர்களா என்று கேட்கிறேன்.

மு பகல் 21-30 **திரு. கே. விநயகம் :** பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். தயவு செய்து கேளுங்கள். முன்பு கொண்டு வந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தைப்பற்றி விவரிப்பதற்கும், கருத்துச் சொல்வதற்கும் நீங்கள் இடம் தந்த பிறகு, அதே முறை தான் இதற்கும் ஒக்கும் என்பதை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஆதலாலே, இந்தத் தீர்மானத்தைப்பற்றி பேசுவதற்கு எங்களுக்கு இப்பொழுது வாய்ப்பு இல்லை, ஒருவேளை எங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்திருந்து, பிறகு அனுமதி தருவதற்கு சாத்தியமில்லை என்று தள்ளியிருந்தால் ஒழுங்காக இருந்

திருக்கும். அப்படியில்லாமல் அந்தத் தீர்மானத்தைப்பற்றிக் குறிப்பிட்டுவிட்டு, தள்ளிவிடுகிறேன், அனுமதி மறுக்கிறேன் என்று சொல்வது முன்பு நடந்ததற்கும், இப்பொழுது நடப்பதற்கும் மாறுபட்டதாக இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு தவறு இன்னொரு தவறுக்கு உதவியாக இருக்க முடியாது. நான் முன்பே ஒற்றி வைப்புத் தீர்மானத்தைப்பற்றி ஒரு முறை வகுத்துக்கொண்ட பிறகு, அதற்கு ஒரு முக்கியத்துவம் இருக்கிறது என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் சொன்னதால், அவர்கள் கொஞ்சம் பேசுவதற்கு, கருத்துத் தெரிவிப்பதற்கு இடம் கொடுத்தேன். அதனுல் இதற்கும் அம் மாதிரி இடம் கொடுக்கக் கூடாதா என்று கேட்பது முறையாக இருக்க முடியாது.

'Lathi charge and arrest of students of the Annamalai University-Ruled out of order on the ground that the subject matter of the motion did not involve more than the ordinary administration of law.'

இது போன்ற விதிமுறைகள் 1958-ஆம் ஆண்டிலேயே அந்த மன்றத்தினுல் ஏற்படுத்தப்பட்டு, ஒற்றிவைப்புத் தீர்மானங்களின் மீது பல தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்தத் தீர்ப்புகளுக்கு மன்றத்து உறுப்பினர்கள் கட்டுப்பட்டு நடந்து கொண்டிருக்கின்றுர்கள். புதியதாக நான் ஒருமுறையும் வகுத்துக் கொள்ளவில்லை. இந்த மன்றத்தில் வழி வழியாக வந்திருக்கிற மரபுகளுக்கு இந்த மன்ற உறுப்பினர்கள் பணிந்து இடம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நீங்கள் கொடுத்த தீர்ப்புக்குக் கட்டுப்பட நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனுல் இது நடைமுறையில் இல்லாத ஒரு அசாதாரணமான காரியம். சரியாக எச்சரிக்கை கொடுக்காமல் போலீஸார் தடியடி பிரயோகம் செய்திருக்கிறுர்கள். அதனுல் 500, 600 பேர்கள் அடிபட்டிருக்கிறுர்கள் இதைப்பற்றி முதல் அமைச்சர் அவர்கள் ஏதாவது விளக்கம் தருவார்களா ? . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தடியடிப்பிரயோகம் மட்டும் தான் இதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தடியடிப்பிரயோகம் எப்படி வந்தது, அதன் பின்விளைவு என்ன என்பதெல்லாம் இதில் வரவில்லை. தடியடிப்பிரயோகம் பற்றி ஒற்றி வைப்புத் தீர்மானம் கொண்டுவருவது முறையாகாது. அதன் விளைவு என்ன, அதன் பெருமை என்ன, அது எப்படி வந்தது, எத்தனை பேர்கள் அடிபட்டார்கள், என்பதெல்லாம் இதில் இல்லை. இந்த சட்டமன்றத்தில் முன்பு தீர்ப்புகள் கொடுத்திருக்கிற வகையிலே தடியடிப்பிரயோகம்பற்றி ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டுவருவது முறையாகாது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தடியடிப்பிரயோகம் அநாகரிகமான முறையில் செய்யப்பட்டதால், பல பேர்கள் காயம் அடைந்திருக்கிறார்கள். 500, 600 பேர்கள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள், கை ஒடிந்தவர்கள் இருக்கிறார்கள், கால் ஒடிந்தவர்கள் இருக்கிறார்கள். அதைப்பற்றி முதல் அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தடியடிப் பிரயோகம் என்ற வார்த்தைகள் தான் இதிலே இருக்கின்றன. அதைத் தொடர்ந்து எத்தனை பேர்கள் அடிபட்டார்கள், எப்படி தடியடிப் பிரயோகம் செய்தார்கள், அதன் விளைவு என்ன என்பதைப்பற்றியெல்லாம் இதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை. தடியடிப்பிரயோகம் பற்றி ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டுவருவது முறையாகாது. அதுதான் விதிமுறை. அதுதான் இந்த மன்றத்தில் வழி வழியாக பின்பற்றப்பட்டு வந்திருக்கிற விதிமுறை. அதற்கு இந்த மன்றத்து உறுப்பினர்கள் பணிந்து, மன்றத்தின் பெருமையைக் காக்க வேண்டும்.

திரு. கே. விநாயகம் : இந்த விஷயத்தில் அரசாங்கம் என்னதான் சொல்ல இருக்கிறது.

What is the decision taken by this Government with regard to the holding of the judicial enquiry?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் அனுமதி தந்த பிறகு தானே அரசாங்கத் தரப்பில் ஏதாவது சொல்லவேண்டுமென்றால் சொல்லவேண்டும்? நான் தான் அனுமதி தரவில்லையே. வேண்டுமானால் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தால், முதல் அமைச்சர் அவர்கள் விளக்கமான அறிக்கை கொடுப்பார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : முதல் அமைச்சர் அவர்கள் ஏதாவது விளக்கம் தருவாரா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் ஏற்கனவே சொன்னேன். கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்தால், முதல் அமைச்சர் அவர்கள் விரிவான அறிக்கை கொடுப்பார்கள்.

THIRU P. G. KARUTHIRUMAN : Sir, without meaning any disrespect to the Chair, we will withdraw from the House.

(Then the hon. Members belonging to the Congress Party staged a walk-out).

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ii) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, இப்பேரவையின் 6-வது விதிக்கிணங்க கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்